1994 மார்ச் 22]

ஏற்கனவே இங்கு இருக்கின்ற சந்தன மரங்களைக் கொண்டு-அங்கே தேவைக்கு அதிகமாகவே சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்த ஆலையில் அதை உற்பத்தி செய்து பார்த்தோம். அது லாபத்தில் ஓடாது மிகுந்த நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அந்தச் சந்தன ஆலையை தொடர்ந்து நடத்துவதற்காக அரசினுடைய பல்வேறு துறைகளோடு, காதி வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் போன்ற துறைகளோடு நாம் மேற்கொண்டு பார்த்தோம். அவர்கள் அது லாபம் ஈட்டுகிற ஒன்றாக கருதப்படாத காரணத்தால் அந்த ஆலையை எடுத்து நடத்தவில்லை. இருந்தாலும் அரசு அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு.கி.தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

74—

பொய்கை அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***19776*—திரு. கி. தருமலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, பொய்கை அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த எப்போது அனுமதி அளிக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதி நிலைமை அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் இதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க கோரியதனுடைய முக்கிய காரணம் இந்தப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களும் குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்து மக்களும் இருக்கிறார்கள். அந்த மாணவர்கள் பயிலுவதற்காக இதை மேல்நிலைப் பள்ளியாக்க நான் இக்கேள்வியைக்

கோரினேன். அந்தப் பகுதிகளில் குற்றப்பரம்பரைக்கு இட்டுச் சென்ற குணம் கெட்டவர்களின் வழியில் செல்லாமல், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய வழியில், இன்று சமூக நீதி காத்து அம்மா அவர்களுடைய வழியில் இன்று அந்தப் பகுதியினுடைய மக்கள் இவர்களுடைய பணியினை நினைவுகூர்ந்து, இந்த அம்மா தான் நமக்கு கல்வி புகட்டுவதற்கு, நம் பிள்ளைகள் குற்றப் பரம்பரைக்குச் செல்லாமல் தடுப்பதற்கு இவர்கள்தான் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என்னிடத்திலே கூறினார்கள். அந்தவகையில் இன்னும் ஒன்றை நான் கூற விரும்புகிறேன். அந்தப் பகுதியில் எந்தக் காலக்கட்டத்திலும் இல்லாத அளவுக்கு இந்தக் குறைந்த நாட்களில் அம்மா அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறிய பிறகு 30 புதியக் கட்டிடங்களைக் கட்டி, 5 புதிய தொடக்கப் பள்ளிகளையும் கட்டியிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக முன்னுரிமை அடிப்படையில் ஆக்கித் தருவார்களா என தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்கை அரசு ஆண்கள் பள்ளியில் 429 மாணவர்கள்தான் பயில்கிறார்கள். இதற்கு அருகில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியானது விரிஞ்சாபுரத்தில் 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இந்த அடிப்படையில்தான் சென்ற ஆண்டில் அது பரிசீலிக்கப்படவில்லை. வரும் நிதியாண்டில் நிதிநிலை அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் அந்தப் பள்ளியில் கட்டிட வசதி இருக்கிறது; போதுமான அளவுக்கு இடம் இருக்கிறது; அரசு கோரிய அடிப்படையில் பணம் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பகுதியினுடைய பிள்ளைகள் 5 கிலோ மீட்டர் தூரம் சென்று அதாவது பேருந்தில் சென்று அல்லது மிதி வண்டியில் சென்று படிப்பதற்கு பொருளாதார வசதி இல்லாத நிலையில் அந்தப் பகுதியினுடைய மாணவர்கள் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை தந்து அதை மேல்நிலைப் பள்ளியாக்குவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கப்பட்டு அந்த அடிப்படையிலே இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.